பக்கங்கள் 8

ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 சித்திரை 9 ஜு ஆகிர் 5 இதழ் 71

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-4-80

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1980-4-21
PERIODICALS DIVISION

## அமரர் 'திரு' உருவச்சிலை: 27-ல் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தலைவர் அமரர் எம். திருச்செல்வத்தின், உருவச்சிலை, யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 27ம் திகதி மாலை திறந்துவைக்கப்படவிருக்கிறது

சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் தலைமையிலான அமரர் திருச்செல்வம் நினைவுக்குழு இதற்கான ஏற்பாட்டைச் செய்துவருகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், அமரர் திருச்செல்வத்தின் சிலையை திறந்துவைப்பார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் உரைநிகழ்த்துவார்கள், [க]

# கனகரத்தினம் நேற்று காலமானார்!

(நமது மட்டக்களப்பு நிருபர் தமிழின்பவன்)

**மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினம், மாரடைப்பால் நேற்று மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். அவருக்கு வயது 56. அன்னாரது மரணச்சடங்குகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவரது குடும்பத்தினர் நேற்று இரவு என்னிடம் தெரிவித்தனர். மரணச்சடங்குகள் சம்பந்தமான ஒழுங்குகளை அமைச்சர் திரு. செ. இராசதுரை கவனித்து வருகின்றார்.**

**ஒரு மணி நேரத்தில்...**

நேற்றுப்பகல் தமது மதியஉணவை முடித்துக்கொண்டதும் பிற்பகல் மூன்றரை மணியளவில் திரு. கனகரத்தினத்துக்கு திடீரென இருதயவலி ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் உடனடியாக மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாக வைத்திய சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. ஆனாலும் அவரது உயிரைக்காப்பாற்றும் முயற்சிகள் அனைத்துமே தோல்விகண்டநிலையில் பிற்பகல் 4-40 மணியளவில் அவர் காலமானார்.

**விமானப்படையிலிருந்தவர்**

மட்டக்களப்பு அர்ச். மைக்கல் கல்லூரியில் ஆரம்பக் கல்விபயின்ற திரு. கனகரத்தினம் சென்னை சென்று உயர்கல்வி பெற்றார். இவர் ஒரு பொறியியலாளர். இரண்டாவது உலக யுத்தத்தின்போது இவர், இந்திய விமானப் படையில் சேர்ந்து அங்கு கடமையாற்றினார். பின்னர், விடுமுறை காரணமாக நாடு திரும்பியதும், இந்தியா செல்லும் நோக்கத்தைக் கைவிட்டார்.

**அரசியல் பின்னணி**

1977-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பொத்துவில் தொகுதியில் தமிழர் விடுதலை கூட்டணி அபேட்சகராகப் போட்டியிட்டு, இரண்டாவது எம்.பி.யாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. கனகரத்தினம், பின்னர் கூட்டணியிலிருந்து வெளியேறி 1977 டிசம்பர் 19-ம் திகதி அரசில் சேர்ந்து பின்னர் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக நியமனம் பெற்றார். 1978 ஜனவரி 27ல் இவரைக்கொலை செய்யும் நோக்குடன் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதும், இவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதும், இது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது இவரது மகன் ஒருவர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

## 14 பேர் பலி!

(சென்னை)

திருவெண்ணாமலை அருகே நேற்று நிகழ்ந்த கோர ரயில் விபத்தில் 14 பேர் பலியானார்கள். பத்துப்பேர் படுகாயமடைந்தனர்.

கொடூரமான விபத்து என்று வர்ணிக்கப்படும் இந்த ரயில விபத்துக்கு நாசவேலை ஏதும் காரணமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

## அரசாங்க அதிபர்களின் இரண்டுநாள் மாநாடு

(கொழும்பு)

அரசாங்க அதிபர்களின் இரண்டு நாள் மகாநாடு, இன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

முதல்நாள் மகாநாட்டில் அமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகமும், இரண்டாம் நாள் மகாநாட்டில் அமைச்சர் திரு. ஈ.எல். சேனநாயக்காவும் சிறப்புரைஆற்றுவார்கள்.

## பாணவிடை சிவன் ஆலயம்: இன்று மகா கும்பாபிஷேகம்

[புங்குடுதீவு]

புங்குடுதீவு பாணவிடை சிவன்கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை சிறப்பாக நடைபெறவுள்ளது.

பல லட்சரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ள இவ்வாலய கும்பாபிஷேகத்தை பிரதிஷ்டாசிரியர் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார்.

இன்று காலை 5 மணிக்கு யாக பூசையாக ஆரம்பமாகும் கும்பாபிஷேக விழாவில் 9-26 மணிக்கு சகல பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். இரவு திருக்கல்யாண வைபவமும், அழகிய பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

இரவு நடைபெறும் வாழ்த்துரை அரங்கு சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் தலைமையில் நடைபெறும். பேராசிரியர்கா. கைலாசநாதக்குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். விசேஷ மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

[சிறப்பிதழ் உள்ளே]

## கௌஹாட்டியில் ஊரடங்கு!

(கௌஹாட்டி)

அஸாம் மாநிலத்தின் தலைநகரான கௌஹாட்டி அருகே உள்ள எண்ணெய் குழாய்க் கிணறுகள் உள்ள பகுதியில் நேற்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்று காலைமுதல் பிரகடனம்செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு, காலவரையறையின்றி அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## "வன்னிவள நாட்டுப்பாடல்" தனித்துவமிக்கது!"
### மெற்றாஸ்மயில் முயற்சிக்கு தலைவர்கள், அறிஞர்கள் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"பிரதேசரீதியில் சிறப்பாக விளங்கிய எமது கலைப்பொக்கிசங்கள் அழிந்து செல்லுகின்றன. அவற்றைப் பேணிக்காக்கும் முயற்சியில் அக்கறை காட்டப்படவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டு இருக்கின்றது. வன்னிப்பிரதேசத்தின், சமூக, பண்பாட்டு, பொருளாதார ஆராய்ச்சிகளை ஆராயக்கூடிய முறையில் பல நாட்டுப்பாடல்களைத் தொகுத்து "வன்னிவள நாட்டுப்பாடல்" நூலாகத்தந்த தம்பி திரு. செ. மெற்றாஸ்மயிலை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஈழத்தமிழருக்கு இவர் அரிய பணியாற்றியுள்ளார்."

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மாலை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்

(8-ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

**ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ், யாழ்ப்பாண மாவட்டத்தில் அறுபது கோடி ரூபா செலவில் பல்வேறுதுறைகளிலும் அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.**

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம், யாழ். அரசாங்க செயலகத்தில், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்றது.

யாழ். அரசாங்க அதிபர்திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்ட தீவிர முயற்சிகளினாலும், அவர் எடுத்ததுரித நடவடிக்கைகளையும் தொடர்ந்தே கடந்த வாரம் மேற்படி அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக இரண்டு நாள் இறுதிக் கருத்தரங்கு நடைபெற்று அது சம்பந்தமான அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசினால் அறிக்கை அங்கீக[illegible] [illegible]களிலிருந்து அறுபதுகோடி ரூபா நிதி திரட்டப்படும்.

இதுபோன்றதிட்டம், ஏற்கனவே குருநாகலையில் இப்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகிறது. வவனியா. மன்னார் ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக இறுதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்டபோதிலும், திட்டங்களை அமுல் செய்யும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமாக கடந்த ஜூன் மாதத்தில் யாழ். செயலகத்தில் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில், விவசாயம், கைத்தொழில், வீடமைப்பு, மீன்பிடி, போக்குவரத்து, நீர்ப்பாசனம் ஆகிய ஆறு துறைகள் சம்பந்தமாக தனித்தனியாக ஆறு கமிட்டிகள் நியமிக்கப்பட்டு தத்தமது துறைகள் பற்றி ஆராய்ந்து இவ்வருட ஆரம்பத்தில் அறிக்கைசமர்ப்பிக்கவேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இதற்கிணங்க மேற்படி ஆறு கமிட்டிகளும் தத்தமது அறிக்கைகளை கடந்த வாரம் நடைபெற்ற இரண்டுநாள் கருத்தரங்கில் சமர்ப்பித்திருந்தன. கொழும்பிலிருந்து வந்த இலங்கை நிர்வாகக் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு நிபுணர்கள் உட்பட யாழ். செயலக உயர் அதிகாரிகளும் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். யாழ் மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதில் யாழ் அரச அதிபர் இப்பொழுது ஈடுபட்டுள்ளார்.

# உல்லாசபுரியாகும்

[யாழ்ப்பாணம்]

இலங்கைவரும் உல்லாச பயணிகளைக் கவரக்கூடிய பருத்தித்தீவை, உல்லாச புரியாக மாற்றுவதற்கான வளங்களை கண்டறிவதற்காக, யாழ் மாவட்ட அமைச்சின் உயர் அதிகாரிகளும், உல்லாசப் பயணத்துறைப் பிரமுகர்களும் இன்று காலை பருத்தித்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இக்குழுவில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், திரு. எஸ். தர்மபாலன், பொதுசன தொடர்பு அதிகாரி, திரு. எஸ். சண்முகசுந்தரம், ஊர்காவற்றுறை. உதவி அரசாங்க அதிபர் திரு. சரசண்முகதாஸ் உட்படப் பலர் செல்கின்றனர். (கே).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

குளிர்பான, தேனீர்ச்சாலை ஒன்றிற்கு சப்ளையர்களும், சமையல்காரர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். லக்கி ஹவுஸ், பஸ் நிலையம், காங்கேசன்துறை. 5526

ஆடம் ஒட்டுவதற்கும், அடிப்பதற்கும் நன்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். கே. கிருஷ்ண பிள்ளை, 23, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5529

உடனடியாக 7 டிரும்(பீயர்) வெற்று போத்தல் தேவை. உடன் விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொது முகாமையாளர், தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம். சங்கானை. 5533

### பயிற்சி

வெளிநாடுகளிலும் கப்பல்களிலும் வேலை பெற விரும்புவோருக்கும், மற்றையோருக்கும் மிகவும் தேவையான மூன்று மாத டிப்ளோமா பயிற்சி நெறிகள் - எயர் கொண்டிஷனிங் (Air Conditioning) மோட்டார் றீவைண்டிங் (Motor Rewinding) ஆகியனவும் ஆரம்பம் 1-5-1980 National Academy, 11, Momsac Building, Stanley Road, Jaffna.

5532

## அறிவித்தல்

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 10,000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூபா 250-00 வைப்புப்பணமாகத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 80-04-25-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்கத்தில் "சாக்குக் கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் 80-04-25-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பளை
ப நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை,

80-04-18. 5521

## வெற்றுச்சாக்கு விற்பனை

மானிப்பாய் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 4500 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்தி வாங்கி பூரணப்படுத்தி "பொது முகாமையாளர், மானிப்பாய் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்" என்ற முகவரிக்கு 24-4-80-ந் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். கேள்விகளை நிராகரிக்கும் உரிமை இயக்குநர் சபைக்கு உண்டு.

பொது முகாமையாளர்.

5536

## நாவற்குழி பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முருங்கன் வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்

மேற்படி சங்கத்தில் பின் வரும் விபர அடிப்படையில் வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

அ. அரிசி சாக்கு (2½ புசல்) 1,715

ஆ. மாவுச்சாக்கு (150 இறா) 91

இ. மாவுச்சாக்கு (140 இறா) தனி — தரம் 1 310

ஈ. சீனிச்சாக்கு (2 அந்தர்) 110

உ. சீனிப் பை (1 அந்தர்) — தரம் 11 1,130

ஊ. நவதானிய சாக்கு 8,261

எ. இளக்கம் 1,065

1. இச்சங்க காரியாலயத்தில் மீளளிக்கப்படும் கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 500/-ம், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணமாக ரூபா 25/-ம் செலுத்தி 28-04-80-ந் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். இப்பத்திரங்களில் எழுதி அனுப்பப்படும் கேள்விகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

2 கூடிய விலை குறிக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளுமிடத்து முழுத்தொகையில் அரைவாசியை உடனே செலுத்துவதோடு, தொடர்ந்து வரும் மூன்று வேலைநாட்களுக்குள் முழுப்பணமும் செலுத்தப்பட்டு களஞ்சியத்திலிருந்து சாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒழுங்குப் பிரகாரம் பணத்தைச் செலுத்தி சாக்குகளைப் பெறத் தவறுபவரின் வைப்புப்பணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

3. 02-05-80-ந் திகதி காலை 10-00 மணிக்கு சங்கக் காரியாலத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் அச்சமயத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரது அதிகாரக் கடிதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமாயிருத்தல் வேண்டும்.

4. மேற்காட்டப் பட்டுள்ள விபரங்களின்படி சாக்குகளுக்கு விலைகள் குறிக்கப்படுதல் வேண்டும். வேறு எதுவிதமான தெரிவுகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரர்கள் முருங்கன் கிளை வெற்றுப்பொருள் இருப்புக் களஞ்சியத்தில் வேலை நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணி வரை சாக்குகளை நன்றாக பார்வையிட்டு பின்னர் விலைகளைக் குறிப்பிடலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், நாவற்குழி பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், முருங்கன்" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 30-04-80-ந் திகதி பிற்பகல் 3-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குக் கேள்விப் பத்திரம்" என குறிப்பிடப்படவேண்டும்.

6. வெற்றுச்சாக்குகள் விற்பனவு சம்பந்தமான சகல விடயங்களிலும் சங்க இயக்குநர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

பொது முகாமையாளர்.
நாவற்குழி பகுதி
ப. நோ. கூ. சங்கம்,
முருங்கன்,
திகதி:- 1980-04-18

(5535)

## நாவற்குழி பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முருங்கன் வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

மேற்படி சங்கத்தில் பின் வரும் விபர அடிப்படையில் வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கழிவு சாக்குகள் —9,500

1. இச்சங்க காரியாலயத்தில் மீளளிக்கப்படும் கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூ 300 மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 15/-ம் செலுத்தி 28-04-80-ந் திகதி பி. ப. 2-00 மணிக்கு முன்பதாக கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பத்திரத்தில் எழுதி அனுப்பப்படும் கேள்விகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

2 கூடிய விலை குறிக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து முழுத்தொகையின் அரைவாசி உடனே செலுத்துவதோடு, தொடர்ந்து வரும் மூன்று வேலை நாட்களுக்குள் முழுப்பணம் செலுத்தப்பட்டு களஞ்சியத்திலிருந்து சாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒழுங்குப் பிரகாரம் பணத்தைச் செலுத்தி சாக்குகளை பெறத் தவறுபவரின் வைப்புப்பணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

3. 02-05-1980-ந் திகதி காலை 10-00 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்விக் காரரோ அல்லது அவரது அதிகாரக் கடிதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமாயிருத்தல் வேண்டும்.

4. மேற்காட்டப்பட்டுள்ள விபரங்களின்படி சாக்குகளுக்கு விலைகள் குறிக்கப்படுதல் வேண்டும். வேறு எதுவிதமான தெரிவுகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரர்கள் முருங்கன் கிளை வெற்றுப் பொருள் இருப்புக் களஞ்சியத்தில் வேலை நாட்களில் காலை 9-00 பி. ப. 4-00 மணிவரை சாக்குகளை நன்றாக பார்வையிட்டுப் பின்னர் விலைகளைக் குறிப்பிடலாம்.

5. கேள்விப் பத்திரங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், நாவற்குழி பகுதி ப. நோ. கூ. சங்கம், முருங்கன்" என்ற முகவரிக்குத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம் (கழிவு)" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் 30-04-80-ந் திகதி பி. ப. 3-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

6. வெற்றுச் சாக்குகள் விற்பனவு சம்பந்தமான சகல விடயத்திலும் சங்க இயக்குனர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

பொது முகாமையாளர்
நாவற்குழி பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

திகதி:- 1980-04-09.

5534

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### தேவை

கொழும்பில் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள சாரதிகளும் சிப்பந்திகளும் தேவை
நேரில் தொடர்பு கொள்ளவும்.
[illegible] மோட்டோர்ஸ்
118, [illegible] யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7783 (5537)

### முழங்காவில்

# குடியேற்றத் திட்டத்திற்கு ஆணையாளர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

முழங்காவில் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தை காணி ஆணையாளர் திரு சமரநாயக்கா பார்வையிட்டு 'இது ஒரு வெற்றிகரமானவிவசாயத் திட்டம் எனப்புகழ்ந்தார்.

குடியேற்றத் திட்டத்தைப் பார்வையிட்டபின் காணி ஆணையாளர், குடியேற்றதிட்ட வாலிபர் கூட்டத்தில் உரையாற்றினர். இக்கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் கூறியதாவது: இத்திட்டத்தில் குளாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் இறைக்கும் யந்திரங்களை இத்திட்டத்திலுள்ள இளைஞர்களிடமே பொறுப்பளிக்க தீர்மானித்துள்ளது. இதனை இயக்குவதற்கு தகுதியான இளைஞர்களுக்கு நீர்ப்பாசன இலாகாவில் பயிற்சியளிக்கப்படும். இத்திட்டத்திற்கு தனியானதொரு கூட்டுறவு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் பயிர்ச்செய்கைக்கு கடன் வழங்கப்படும். ஒவ்வொரு காணிக்கும் உத்தரவுப்பத்திரம் சீக்கிரம் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு நீர்வாய்க்கால்களும் விரைவில் அமைக்கப்படும்.

இக்கூட்டத்தில் உதவிகாணி அதிபர் திரு. கணேசநாதன், குடியேற்ற அதிபர் திரு. சோமஸேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். குடியேற்ற அதிபர்கள் திரு. கோபாலரத்தினம் திரு. மரியநாயகம், விவசாய போதனாசிரியர் திரு. திருச்சிற்றம்பலம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க)

## சுவீப் முடிவுகள்

நாவலப்பிட்டியில் அதிர்ஷ்டம் பாரிக்கப்பட்ட 775 வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**11 R 0221**
ரூபா. 1,00,000

இரண்டாவது பரிசு
**23 Y 0801**
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
**13 D 0606**
ரூபா 10,000

தலா 1,035 ரூபா ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

07 A 0684
02 B 0395 — 06 B 0732
07 B 0071 — 14 B 0015
22 B 0636 — 24 B 0275
04 C 0739 — 25 C 0380
06 D 0914 — 09 D 0049
10 D 0657 — 18 D 0562
04 E 0986 — 07 E 0121
11 E 0687 — 22 E 0284
06 F 0547 — 11 F 0105
14 F 0147
02 G 0363 — 04 G 0575
06 G 0721 — 08 G 0663
10 G 0373 — 14 G 0149
26 G 0174
13 H 0502
08 J 0874 — 14 J 0375
20 J 0094 — 25 J 0394
25 J 0443 — 28 J 0400
28 J 0971
10 K 0086 — 14 K 0731
18 K 0514 — 19 K 0746
06 L 0708 — 08 L 0938
20 L 0772 — 21 L 0466
15 M 0658 — 16 M 0493
17 M 0291 — 19 M 09[illegible]9
05 N 0083 — 06 N 0604
13 N 0131 — 15 N 0473
26 N 0658 — 26 N 0962
02 O 09[illegible]6 — 07 O 0309
09 O 0816 — 11 O 0461
19 O 0543 — 20 O 0019
08 P 0497 — 11 P 0316
27 P 0794
03 Q 0531
03 R 0401 — 12 R 0941
17 R 0905 — 21 R 0638
23 R 0082
05 S 0933 — 06 S 0671
10 S 0740 — 14 S 0967
04 T 0148 — 05 T 0024
13 T 0316 — 18 T 0383
22 T 0729
08 U 0876 — 15 U 0868
16 U 0150 — 21 U 0852
23 U 0370 — 28 U 0804
11 V 0888 — 21 V 0871
23 V 0258
09 W 0465 — 09 W 0557
11 W 0974 — 21 W 0979
02 X 0382 — 04 X 0708
21 X 0599
14 Y 0590 — 24 Y 0678
08 Z 0598 — 12 Z 0528
16 Z 0844 — 19 Z 0935
24 Z 0121

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்]

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர் தரம் 111

மேற்காண் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்துடன் கல்வித் தராதரப் பத்திரங்களினதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களினதும் அண்மையில் பெற்ற நற்சாட்சிப்பத்திரங்களினதும் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். மேலும் வேண்டிய விபரங்களை 15009/12 ஏ, 12-5-72 விசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

விண்ணப்பங்கள் 30-4-80 பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொதுமுகாமையாளருக்கான பதவி" விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வேலணை" என்றவிலாசத்துக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சி. இராசரத்தினம்,
தலைவர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்.

5541

## 28-ம் திகதிவரை இவர்களுக்கு றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி தாலிக்கொடிகளைக் குறித்துப் பொலிஸ் நாய் மோப்பம் பிடித்தநபரும் பொலிசாரால் கைது செய்யப்பட்ட மற்றொரு நபரும் இம்மாதம் 28ம் திகதி வரை றிமாண்டில்வைக்கப்பட்டனர்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி தாமரைச்செல்வம் என்ற பெண்ணின் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி புத்தாண்டு தினத்தன்று அதிகாலை திருடர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

( 8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னடக்கம், தன் தியாகம், தன்னொறுப்பு முதலியவை தெய்வீக வாழ்வு நடாத்தி பூரணவிடுதலை யடைவதற்கு மிக முக்கிய மானவை.

—சுவாமி சிவானந்தர்

# "மாவட்ட அபிவிருத்திச் சபைமூலம் தமிழ் மக்கள் பிரச்னை தீராது

## வட்டமேசை மாநாடு தீர்வு இன்றேல் சுதந்திர 'தமிழகம்' தான் ஒரேவழி"

### பத்திரிகை வெளியீட்டு விழாவில் குமார்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் தமிழ் இனத்தின் பிரச்னைகளுக்கு தீர்வு காணமுடியாது. வட்ட மேசை மாநாட்டின் மூலமே தமிழ் இனத்தின் பிரச்னைகளுக்கு தீர்வு காணலாம். அப்படித் தீர்க்க முடியாவிட்டால் பாரம்பரிய தமிழ்பிரதேசத்தில் சுதந்திர தமிழகம் நிறுவ முன்வர வேண்டும்.''

தமிழ் காங்கிரஸ் தலைமைக் காரியாலய மைதானத்தில் நடத்த 'தமிழகம்' வெளியீட்டு விழாவில் பேசிய தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், மேற்கண்டவாறு கூறினர்.

விழாவிற்கு ஆரம்பத்தில் உப தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகமும் பின்னர் சட்டத்தரணி ஜிம்மிராசரத்தினமும் தலைமை வகித்தார்கள்.

தமிழ் காங்கிரஸ் பத்திரிகையான 'தமிழகம்' இதழில் முதல் பிரதியை டாக்டர் ஏ. எல். ஏபிரகாமிடமிருந்து திரு. எம். கே. சுப்பிரமணியம் பெற்றுக் கொண்டார்.

### போராட்டத்திற்கு தயாரா?

திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது தமிழ் ஈழத்தை பேச்சுவார்த்தை மூலமோ மாவட்ட அபிவிருத்திச்சபை மூலமோ எதாக்கட்சித் தலைமைப் பீடத்தை ஏற்பதன் மூலமோ கோரிக்கையை உலக மறியச் செய்வதன்மூலமோ அகிம்சை மூலமோ பெற்று விடமுடியாது. போராட்டம் மூலம் தான் பெறமுடியும் ஆயுதம் தாங்கி போராடுவதன் மூலமே தமிழ் ஈழத்தை பெறமுடியும் இதற்கு தமிழ் எம். பிக்கள் தயாரா? என்று கேட்கிறேன்.

தமிழ் காங்கிரஸின் கொள்கை என்ன? திட்டம் என்ன? என்று கேட்கிறார்கள் கடந்த 3 வருடகாலம் கூட்டணியினர் தமிழ் ஈழத்தை பெற என்ன திட்டத்தை முன் வைத்தார்கள். தமிழ் ஈழத்திற்காக ஒரு போராட்டமாவது நடத்தினர்களா?

தமிழ் காங்கிரஸின் கொள்கையைத்தான் கூட்டணியினர் பின்பற்றி வருகின்றனர். நாங்கள் அபிவிருத்தி பற்றி 25 வருடங்களுக்கு முன்மே சிந்தித்தோம் கூட்டணியினர் இன்று தான் சிந்திக்கிறார்கள். தேர்தல் காலத்தில் அபிவிருத்தி பற்றி பேசாதவர்கள் இன்று அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

### காங்கிரசின் இலட்சியம்

எமது கட்சியின் லட்சியம் தமிழ் மக்களின் 'சுதந்திரம்' இலங்கையில் தமிழ் இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் இலங்கை பிரிந்தாலும் அதுவும் சுதந்திரம் தான் எமது குறிக்கோள் என்றும் மாறாது இருந்து வருகிறது.

சுயநிர்ணய உரிமையை எமது கட்சி வலியுறுத்தி வந்திருக்கிறது. எமது சுபாதிபத்தியத்தை நாமே நிர்ணயிக்க வேண்டும் என்று எமது கட்சி அன்று தொட்டுக் கூறிவருகிறது.

பொருளாதார ரீதியில் எமது நாட்டை முன்னேற்ற வேண்டும். தமிழ்ப்பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடக்கக் கூடாது என்று அன்று தொட்டு இன்றுவரை தமிழ் காங்கிரஸ்கட்சி கூறிவருகிறது

எமது கட்சி ஆரம்பிக்கப் பட்ட நாள் முதல் தமிழ்ப் பகுதியில் பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டும் என்று கூறிவந்துள்ளது.

தமிழ்மக்கள் ஏகோபித்து அனுப்பிய ஒரேகட்சி கூட்டணி என்பதற்காக நாம் சிலகாலம் ஒதுங்கியிருந்தோம் ஆனல் கூட்டணியினர் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யாததால் நாம் திரும்பவும் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க ஆவன செய்ய முன் வந்தோம்.

### சுதந்திர தமிழகம் அமைப்பதே அவசியம்

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி செயலாளர் திரு. மகேந்திரராஜா கூறியதாவது: எங்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தலைவர்கள் தமிழரசுக்கட்சியை அழிப்பதற்கு பங்குகொண்டிருக்கிறார்கள். இந்த நல்லகாரியத்தை செய்வதற்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம். கால் நூற்றாண்டுக்குமேலாக எங்கள் கட்சியுடன் போட்டிபோட்டு வந்த தமிழரசுக்கட்சி இன்று அழிந்துவிட்டது. தந்தை செல்வா ஆரம்பித்த தமிழரசுக்கட்சியை கூட்டணியினர் அழித்துவிட்டனர். இதேபோல் தந்தைசெல்வாவின் பத்திரிகையை அழிப்பதற்கு கூட்டணியினர் மற்றொரு பத்திரிகை ஆரம்பிக்க போகின்றார்கள்.

கூட்டணியினர் இதேபோல் தமிழ்க்காங்கிரஸை அழிக்கவும், பல வழிகளைக்கையாண்டு தோல்விகண்டுவிட்டார்கள்.

தமிழ்க்காங்கிரஸின் லட்சியம், தமிழ் இனத்தின் சுதந்திரம் சங்கிலியனும், பண்டாரவன்னியனும் ஆண்ட பிரதேசத்தில் சுதந்திர தமிழகம் அமைப்பதே எங்கள் லட்சியம்.

தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டுவதே தமிழ்க்காங்கிரஸின் குறிக்கோளாகும். சமதர்மலட்சியம் கொண்ட குடியாசு உருவாகவும், தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்கவும், சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் காங்கிரஸ் பாடு படும்.

பாரம்பரிய சொந்த இயமான தமிழ்மண்ணைக் காப்போம். சாதிப்பாகுபாட்டினை அழிவேப்போம்

திருமதி அந்தோனியார்

(7ம் பக்கம் பார்க்க)

### மக்கள் கருத்து

## இவ்வீதி திருந்தினல் கோடி நன்மை

காரைநகர் இந்துக் கல்லூரியில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதி சயம்பு வீதி வட இலங்கையின் புகழ்பெற்ற கசூரினா கடற்கரைக்குச் செல்வதற்கும், ஈழத்துச்சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவன் கோவிலுக்குப் போவதற்கும் இச்சயம்பு வீதி திருத்தப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். இவ்வீதியைத் திருத்துவதற்காகக் கடந்த டிசம்பர் மாதத்தில் வீதியின் இரு பக்கத்திலும் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. ஆனல் கடந்த நான்கு மாதங்களாக எவ்வித வேலையும் நடைபெறவில்லை. இவ்வீதி திருத்தப்பட்டால், இதன் மூலம் கசூரினு பீச்சுக்கு பஸ் சேவையை நடாத்த இ. போ. ச.வினர் இணங்கியுள்ளனர். இப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும், பீச்சுக்கு வருபவர்கட்கும், மாணவர்கள், நோயாளர்கள், கடற்தொழிலாளர்கள் எல்லோருக்கும் பஸ் சேவை மிகுந்த உதவியாக இருக்கும். எனவே கூடிய விரைவில் இவ்வீதியைத் திருத்தித்தரும்படி தொடர்புடைய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

வி. எஸ். ஆனந்தன்
காரைநகர்

### நாடும் நடப்பும்

"சைக்கிளில் பெல் இல்லை என்று பொலிஸ்காரன் பிடிக்கிறான். சைக்கிளில் பெல்லைப் பூட்டி எங்கேயாவது நிறுத்திவிட்டு நமது அலுவல்களைப் பார்த்துவிட்டுவந்து சைக்கிளை எடுத்தால் பெல்மூடியை யாராவது திருடிச் சென்றுவிட்டிருப்பதைத்தான் காணமுடிகிறது. சைக்கிள் களவுபோகாமல் ஒன்றுக்கு இரண்டு பூட்டுகளைப் போட்டுப் பூட்டிவைக்கலாம். பெல்மூடிக்கும் மற்றும் உதிரிப்பாகங்களுக்கும் பூட்டுப் போடமுடியுமா? பெல் மூடி களவுபோய்விட்டது என்று சொன்னாலும் பொலிஸ்காரன் விடுகிருனா?" என்று நண்பர் ஒருவர் அழுதுவடித்தார்.

பின்னர் அவரே ஒரு சமாதானமும் சொன்னார்.

பொலிஸ்காரன் இப்படி நடவடிக்கை எடுக்கவும் தான் வேண்டும்.

ஒருநாள் ஒரு ஒழுங்கை மூலையில் நான் மெதுவாக எனது சைக்கிளில் எனது வழத்தில் கரையோரமாகப் போய்க் கொண்டிருந்தேன். எதிர்ப்புறத்திலிரு இளைஞர்கள் வேகமாகவந்து ஒழுங்கையில் திரும்பினர்கள் ஒரு விநாடி நான் முந்தியிருந்தால் அவர்கள் சைக்கிளில் மோதுப்பட்டு என் உயிரே போயிருக்கும். அவர்கள் வந்தசைக்கிளுக்கு பெல்இல்லை; பிரேக்கும் இல்லை!

"உண்மைதான். இப்போது சைக்கிள் ஓட்டமும், மோட்டார் சைக்கிள் ஓட்டமும் ரொம்ப மோசம். வீதியில் நடந்து செல்வதே ஆபத்தாக இருக்கிறது" என்றேன்

"பொடியன்கள்தான் வீதியை மறைத்து நான்கைந்துபேராகச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்றால் இப்போ பொட்டைகளுமல்லவா வீதி ஒழுங்குகளைக் கவனிக்காமல் சவாரி செய்கிறார்கள்" என்று கவலைப் பட்டார் நண்பர்.

"பொட்டைகளும் தமது துணிச்சலைக் காட்டாவிட்டால் மற்றவர்கள் ஏமாற்ற முனைவார்களே" என்று நண்பரே மற்றொரு சமாதானத்தையும் சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

0 0 0

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் வியாழக் கிழமையே தபாலில் சேர்க்கப் பட்டுவிட்டதாகவும் மறு நாள் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்குமென்றும் அறிவிக்கப் பட்டது.

சென்ற வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து ஏமாந்தவர்கள் பலர். இன்று திங்கட்கிழமை எல்லோருக்கும் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

பரீட்சையில் சித்தியடைந்தாலும் க. பொ. த. (உயர்தரம்) படிப்பதற்குச் சில பிள்ளைகளுக்கு ஒரு பாடத்தில் ஒரு 'C' கிடைக்கவில்லையாம் இரண்டு 'C' இருந்தால்தான் உயர் வகுப்புக்குச் செல்லமுடியுமாம். ஒரு 'C' இருப்பவர்கள் உயர் வகுப்பில் படித்துக்கொண்டே மற்றொரு பாடத்தில் 'C' எடுப்பதற்கு ஆகஸ்ட் மாதப் பரீட்சைக்குத் தோற்றலாமென்றால் அந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டியதேதி முடிந்துவிட்டது. பரீட்சை முடிவுகள் நேரத்துக்கே வெளிவந்திருந்தால் இந்தக் கஷ்டம் ஏற்பட்டிராது ஒரு 'C' எடுப்பதற்காக மேலும் ஒரு வருடத்தை அதே வகுப்பில் செலவிடுவதா?

பிள்ளைகளும் பெற்றோரும் கேட்கும் கேள்வி இது?

-- ஊர்சுற்றி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேகங்கள் மக்களை தூய்மைப்படுத்த உதவும்

அரிது அரிது மானிடராதலரிது. மானிடப் பிறப்பின் மூலமே இறைவன் திருவடியை அடையமுடியும். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் பணிபுரிந்து பிறவியின் நோக்கத்தை அடைதலே இம்மனிதப்பிறப்பின் நோக்கமாகும். தேவர்களே இப்பூமியிலே பிறந்து சிவனை வழிபட ஆசை கொண்டார்கள் என்பதன் மூலம் மனிதப் பிறப்பின் அருமை விளங்குகிறது.

உருவத்திருமேனியில் இறைவனை இருத்தி தியானிக்கும் முறையை சிவாகமங்கள் விளக்கியுள்ளன. உருவத்திருமேனியில் இறைவன் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்புரியும் இடமே ஆலயம் ஆகும். ஆலயம் என்பது ஆன்மா இறைவனிடம் ஒடுங்கும் இடம் எனக் கருதப்படுகிறது

ஆலயத்தில் கும்பம், பிம்பம், தம்பம் என்னும் மூன்றிலும் இறைவன் எழுந்தருளி மறைந்து நின்று அருள்புரிகின்ருர் எனவேதான் நமது மூதாதையர் பண்டுதொட்டே ஆலயங்களை அமைத்து தமது விருப்பத்திற்கேற்ற உருவத்திருமேனிகளை நிறுவி கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு சிறந்த சீலர்களாகவிளங்கினுர்கள்

கும்பாபிஷேகம் என்றசொல்லுக்கு தமிழில் குடமுழுக்கு என்றும், பெருஞ்சாந்தி என்றும் அழைப்பார்கள். எனவே கும்பாபிஷேகக் கிரியைகளை நாமும் அறிந்து அதன் தத்துவங்களை உணர்ந்துஇருத்தல் மிகவும் நல்லது. சிவாகமங்கள் ஆலயக்கிரியைகளை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நான்காக வகுத்துள்ளது. ஆலயத்தைக் கட்டுவதற்கு நிலத்தை மட்டப்படுத்தி உழுவதை கர்ஷணம் என்றும், பிரதிஷ்டை என்ருல் நிறுத்துதல் என்றும் உற்சவம் என்பது ஐந்தொழில்களில் முதலாகிய படைத்தல் என்றும், பிரதிஷ்டை, உற்சவம் என்பவற்றில் ஏற்படும் தவறுகளை நீக்குவது பிராயச்சித்தம் என்றும் கூறுகின்றது. "பிரதிஷ்டையை நான்காக வகுத்துள்ளனர் அவையாவன: அநா

ந. இராசதுரை
(ஆசிரியர்)

வர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம். அந்தரிதம் ஆகும். அநாவர்த்தனம் என்பது ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்தல். ஆவர்த்தனம் என்பது பல ஆண்டுகளாக நாட்பூசையும் திருவிழாவும் நடைபெற்று வரும்பொழுது எதிர்பாராது இயற்கையின் சீற்றத்தால் சீரழிக்கப்பட்டால் அதனை செப்பனிடுதல். புனராவர்த்தனம் என்பது பலதிருத்தங்கள் செய்து அழகுபட அமைத்தலாகும். அந்தரிதம் என்பது ஆலயத்துள் யாரேனும் இறந்தாலும், கொல்லப்பட்டாலும் தொடக்குடையோர் புகுந்தாலும் மீண்டும் பிரதிஷ்டை செய்தல் இத்தகைய கும்பாபிஷேகங்களில் நடைபெறும் கிரியையில் கிடைக்கும் பலன்கள் பல மனிதர்களைத் தூய்மைப்படுத்தி தெய்வீக நிலைக்கு உயர்த்தவல்லனவாகும்.

மகாகும்பாபிஷேகக் கிரியைகளில் மிகவும் முக்கியமானவை ஆறுகிரியைகளாகும். மகாகும்பாபிஷேகத்திற்கு முதலாவது நிகழும் கிரியை ஆசாரிய வரணம் ஆகும். ஆசாரிய வரணம் என்பது சிறந்த குருவைத் தெரிவுசெய்தலாகும் குருவின் தவவலிமையினுலேயே விக்கிரகம் தெய்வமாக மாறுகிறது குருவினுடன் இணைந்து ஆலய நிர்வாகிகளும் மக்களும் வழிபடும்பொழுது விக்கிரகம் ஒளி பெறுகிறது. உருவேறத் திரு ஏறும் என்று சொல்வார்கள் நம்முன்னேர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட ஆசாரியார் பாலஸ்தாபன ஆலயத்துள் புகுந்து கும்பாபிஷேகத்தை திறம்பட நடாத்துவதற்கு அனுமதியை வேண்டுவார் இதனையே "தேவானுஞ்ஞை" எனப்படும் சிவாச்சாரியாரின் வேண்டுதலை ஏற்று ஆசீர்வதித்து அனுமதியளித்தலை பிராமணுஞ்ஞை எனப்படும் அடுத்து விநாயகப்பெருமானைக் குறித்து பிரார்த்தனை செய்யப்படும். தொடர்ந்து நவக்கிரக ஓமம் நிகழும் நவக்கிரக ஓமம் என்பது காற்று, மழை, நெருப்புப் போன்றவற்ருல் தடைகள் ஏற்படாமல் நவகோள்களையும் வேண்டுதலாகும், சகல கிரியைகளும் மங்களகரமாக சிறப்பாக நிறைவேற நவக்கிரகங்கள் துணைபுரியும்.

மகாகும்பாபிஷேக கிரியைகளில் இரண்டாவது முக்கியமானது திரவிய சுத்தியாகும். திரவியசுத்தி என்பது பலவழிகளாலும் சேர்க்கப்பட்ட திரவியங்களில் குறைபாடுகள் இருப்பின் அவற்றை நீக்கி தூய்மைப்படுத்தி பதினெரு பங்குகளாக வகுத்தல் திரவிய விபாகம் எனப்படும். திரவிய சுத்தியுடன் ஆலயமும் சுத்திகரிக்கப்படுகின்றது தீய சக்திகளை அழித்து தேவர்களின் துணையும் வேண்டப்படுகிறது. எட்டுத் திசைகளிலும பிரவேசப்பலி இடப்படுகிறது. அதன் பின்னர் கிராம மக்கள் பசியும் பிணியும் இன்றி சீலர்களாகவும் பல வளமும் பெறவும் கிராமசாந்தி செய்யப்படுகிறது. எண் திசைகளும் தூய்மை பெற்று எண்திசைப் பாலகர்களும் வந்து அமர்வதற்காக வாஸ்து சாந்தி செய்யப்படும் அடுத்து மூன்ருவதாக நிகழ்வது பெருங்கிரியையாகும். பெருங்கிரியை விக்கிரக பிரதிஷ்டை ஆகும். பஞ்சபூதங்களில் பரவி நிற்கும் இறைவனை உருவத்திருமேனியில் ஒன்றுபடும்படி செய்தலே முதன்மையான கிரியையாகும். கண்திறத்தும் நீரில் கிடத்தியும் நெல்லினுல் மூடியும் படுக்கையிற் கிடத்தியும் வீதிவலம் வருவித்தும் பரம்பொருளை விக்கிரகத்தில் ஒன்றுவிப்பர். பின்பு அஷ்டபந்தன மருந்து சாத்தப்படும். இதன் பின்னர் விப்பசுத்தி நிகழும். தூயமன ...

(8-ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஆலயங்களைத் தரிசிக்கவே இளைஞர்கள் பின்நிற்கும் இக்கால கட்டத்தில் இளைஞர்களே முன்நின்று புங்குடுதீவு பாணுவிடை சிவன் கோவில் புனர்நிர்மாணத்திருப்பணிகளை செய்துமுடித்து நிறைவு செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

பண்பாட்டிலும், தமிழின விடுதலை உணர்விலும் உயர்ந்து நிற்கும் புங்குடுதீவு மக்களுக்கு பேரருள் பாலித்து வரும் இச்சிவன் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்று குடமுழுக்குவிழா காண்பதுஅறிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன். குடமுழுக்கு நிறைவுற்ற பின்னரும் சோர்வுறுது, தமிழ்ப்பணியோடு இவ்வாலயத் திருப்பணி வேலைகளையும் பெரியோர்களின் ஒத்துழைப்போடு இளைஞர்கள் தொடர்ந்து செய்துவரவேண்டுமென்பதே எனது வேணவா ஆகும்.

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்த மெய்யன்பர்களினதும் குறிப்பாக இளம் சந்ததியினதும் வாழ்வும், ஆலயத்தின் வளர்ச்சி போன் மெருகு பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்று நடைபெறும் இக்குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் எனது பாராட்டுக்கள் கலந்த மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ. அமிர்தலிங்கம்,
எதிர்க்கட்சித் தலைவர்.

# புங்குடுதீவு பா...
## மகாகும்பாபிஷேக

### சிவலிங்கம் வளரத் தொடங்கியதால்

தமிழ் ஈழத்தின் தொன்மை மிக்க ஆலயங்களுள் ஒன்றாகத் திகழ்வதும் அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்தேர்ச்சியாக திருநாவுக்கரசு நாயனர் குருபூசையைக் கொண்டாடும் பெருமை மிக்கதும் புங்குடுதீவின் கடற்கரையில் யாழ்ப்பாணத்திலிருந்து பதினைந்து மைல் தூரத்தில் உள்ள ஊரைதீவுக் கிராமத்தில் பலைப்பிரதேசத்தில் பாணுவிடை எனும் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதும் மூலமூர்த்தியாக ஸ்ரீபர்வதபத்தினி அம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரப் பெருமானைக் கொண்டிருப்பதுமான புங்குடுதீவு பாணுவிடை சிவன் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் இன்று காலை 9-26 க்கு 10-12 க்கும் இடையில் வரும் மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் பேளமும் தாளமும் மிகுந்து முழங்கிட அடியார் திருக்கூட்டத்தின் 'அரோகரா' ஒலியின் மத்தியில் அலங்கார ரூபமாக நிகழ்த்த திருவருள் கூட்டியுள்ளது.

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆலயத்தின் வடபாகத்தே வியாபித்திருக்கும் கடலில் கல்லொன்றைக் கண்டெடுத்த அடியவர் ஒருவர் தெய்வஅனுத்தி கொண்டு கலையாடிய வண்ணம் அக்கல்லைக் கொண்டு வந்து தற்போது சிவலிங்கம் இருக்கும் இடத்தில் வைத்தார் என்றும் அதன் பின்னர் அக்கல்லை எவராலும் தூக்கிக் கொள்ள முடியாமல் போய் விட்டதென்றும் அதன் பின்னர் அக்கல்லை வழிபட ஆரம்பித்தனர் என்றும் கர்ணபரம்பரைக்கதைகள் பொழிகின்றன. இவ்வாறு ஆரம்பித்த வழிபாட்டின் மகிமையும் மாண்பும் குறித்த கல்லானது சிவலிங்க அமைப்பில் வளரத் தொடங்கியதால் பல்கிப் பெருகலாயிற்று. இன்று இச்சிவலிங்கம் சுமார் மூன்றரை அடி உயரமாக வளர்ந்திருப்பதால் தமிழ் சைவர்கள் மத்தியில் உள்ள தான்தோன்றி ஆலயங்களுள் ஒன்ருக இத்தேவஸ்தானம் கணிக்கப்படுகிறது.

சிறிய ஓலைக்குடிசை... இருந்த இவ்வாலயம் ... ரத்துத் தொளாயிரத்... பத்தேழாம் ஆண்டு ... கன்று உயர்திரு சி. ம... சுவாமிகளின் பெரு... யால் வரைகற்களால் ... க்கப்பட்ட மூலஸ்... தோடும் பலபரிவார ... ஆலயங்களோடும் முத...

(ஜெர்ப...

### இன்று இரவு நிகழ்ச்சிகள்

திருக்கல்யாண வைபவமும், சுவாமி வீதியுலா வருதலும்.

மேளவாத்தியக்கச்சேரி: நாச்சிமார் கோவிலடி பி. காளமேகம் குழுவினர், இணுவில் என். ஆர் கோவிந்தசாமி குழுவினர், கோண்டாவில் வி. கே. காலமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்.

### வாழ்த்து...
### அரங்கில்...

தலைமை: எஸ். ... மகேந்தி...

வாழ்த்துரைப்பே... பேராசிரியர் கா. ... நாதக்குருக்கள், சி... ந்தபானு சோ. ... மணியக்குரு, சிவ... ழ் செல்வி தங்... அப்பாக்குட்டி.

## காவலூர் எம்.பி. இரத்தினம் வாழ்த்துகிருர்

புங்குடுதீவு, பாணுவிடை சிவன்கோவில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற வேண்டிய திருப்பணிகளைச் செய்த மெய்யன்பர்களின் தொண்டு பாராட்டுக்குரியது.


ஊருக்கு ஒரு திருக்கோயிலாகுதல் நல்ல முறையாக நடத்தப்படவேண்டும். ஊரைதீவுப் பகுதியில் எல்லா நிறைகளையுமுடைய கோயில் இல்லாத குறையை அப்பகுதி மக்கள் இந்தத் தொண்டினுல் நீக்கி விட்டார்கள்.

ஆலயத்தை நல்ல முறையில் திறமாக பரிபாலித்து வர வேண்டிய பொறுப்பும் அவர்களுக்குரியது.

குடமுழுக்கு செய்தால் மட்டும் சிவத்தொண்டு நிறைவேறிவிட்டதாக கருதாமல் நித்திய நைமித்திய பூசைகள் எல்லாவற்றையும் செய்து வருவதற்கும் தொண்டர்கள் ஒழுங்கு செய்யவேண்டும்.

குடமுழுக்கு விழா இறைவன் அருளால் இனிது நடைபெற வாழ்த்துகிறேன்.

கா. பொ இரத்தினம்,
பா. உ.



ஆலய புனருத்தா... முடித்த் கோண்டாவி... வினை பாராட்டுமுக... ஸ்தபதியாருக்கு பா... தட்சணை வழங்குவ...

### கும்பாபிஷேக யாக உபயங்கள்

| | |
|---|---|
| பிள்ளையார் | திரு த. க. இராசலிங்கம் |
| சிவன் | திரு. எஸ். கே மகேந்திரன் |
| அம்பன் | திரு மா. ஆ. பாலசுப்பிரமணியம் (புக் ஜூலைக்கட்டுடன்) |
| ஐயனுர் | திரு. கு. சிவலிங்கம் |
| எழுந்தருளி அம்மன் | திரு வி. இராமநாதன் |
| வயிரவர் | திரு சி. பொன்னையா |
| நவக்கிரகம் | திரு. பா. பாலசுந்தரம் |
| முருகன் | திரு. பொ. குமாரத்தினம் |
| சண்டேசுரர் | திரு இ. பொன்னுத்துரை |

புங்குடுதீவு பாணுவிடை சிவன் ஆலய
திருக்குட திருமஞ்சனவிழா சிறப்புற வாழ்த்தும்

யப்பான் ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்
64, கன்ஞதிட்டி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518

பாணுவிடை சிவ...
சிறப்புற ...
சிங்கப்பூ...
The Malayan...
128, 130, கே கே, ...
தெ...
சகலவிதமான இ...
பலவர்ண பெயின்...
பெற்று...

புங்குடுதீவு ...
பெருவிழா...
பாதுச...
199, மின்சா...
கிளை ஸ்தாபனம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணவிடை சிவாலய

## ...ஷேக சிறப்பிதழ் (21-04-80)

## ...கியதால் பல்கிப் பெருகிய ஆலய மகிமையின் வரலாறு

கே. ஜீ. இராஜா
(ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு)

...றது. சிறிய ஓலைக்குடிசைகளில் இருந்த இவ்வாலயம் ஆயி...த்துத் தொளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு சிவக்...ன்று உயர்திரு சி. மருதட்பு ...வாமிகளின் பெருமுயற்சி...யால் வைரக்கற்களால் அமைக்கப்பட்ட மூலஸ்தானத்...தோடும் பலபரிவார மூர்த்தி ஆலயங்களோடும் முதலாவது மகா கும்பாபிஷேகத்தைச் சந்தித்தது அதன்பின்னர் தொடர்ந்தேர்ச்சியாக கொட்டகைகள் மடப்பள்ளி அறைகள், வாகன சாலைகள், களஞ்சிய அறைகள், நவக்கிரக மண்டபம், வசந்தமண்டபம், சுற்றுமதில் என்பன பிரமாண்டமான முறையில் அமரர் அ கு. மதியாபரணம் அவர்களின் வழிநடத்தலின் கீழான ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினரால் மறைந்தும் மறையாத சிவசிறி மூ. இராமச்சந்திர ஐயர் அவர்களை ஆசி கூறும் அர்ச்சனைகளின் மகிமையால் அமைக்கப்பட்டன

இதன்பின் கடந்த ஆண்டும் இவ்வாண்டும் இவ்வாலயத்தின் சரித்திரத்தில் பொற்காலம் என்று வர்ணிக்கப்படத்தக்க வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. 1947-ம் ஆண்டு தொடக்கம் அலங்காரத் திருவிழாவும் 1960-ம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றத் திருவிழாவும் நடைபெற்று வந்த இவ்வாலயத்தை புனர் நிர்மாணம் செய்ய வேண்டி கடந்த ஆண்டு வைகாசி மாதம் 27ம் திகதி திரு என். கே. மகேந்திரன் அவர்களின் வழிநடத்தலின் பேரில் ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர் மூலமூர்த்தியையும் பரிவார மூர்த்திகளையும் வாலஸ்தாபனம் செய்தனர்.

தொடர்ந்து அசுரவேகத்தில் நடைபெற்று வந்த ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான திருப்பணிகளின் பெறுபேறாக பிள்ளையார், முருகன், சண்டேஸ்வரர், வைரவர் ஆகிய ஆலயங்கள் புதிதாக சிற்பவேலைப்பாடுகளோடு அமைக்கப்பட்டன. அத்தோடு சிவன் அம்மன் பண்டிகைகள் புதுப்பிக்கப்பட்டு சிற்பவேலைப்பாடுகள் செய்யப்பட்டன. அம்மன் வாசலின் கொட்டகை அமைக்கப்பட்டு நந்தி பலிபீடம் அதன் கீழ் நிர்மாணிக்கப்பட்டன. சிவன் அம்மன் மூலஸ்தானங்களில் மாபிள் பதிக்கப்பட்டது. ஆலயம் முழுவதும் குறையின் பூச்சு வேலைகள் செய்யப்பட்டன.

சுயம்பு லிங்கம் ஆனமையால் ஓராண்டுக்குள் கும்பாபிஷேகத்தை நடத்திமுடிக்க வேண்டுமென்று ஓயாது அயராது, அலுக்காது உழைத்து இன்று வெற்றிப்புன்னகை புரியும் ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர் பாராட்டப்படவேண்டியவர்கள் அவர்களது பணிகள் மேன்மேலும் சிறப்புற எல்லாம்வல்ல இறைவனின் திருவருளும் அடியார்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் அவர்களது செயல் திறன் என்றும் வெற்றிபெறுவதாக.

### வாழ்த்துரை அரங்கில்

தலைமை: எஸ். கே. மகேந்திரன்
வாழ்த்துரைப்போர்; பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள், சித்தாந்தபானு சோ. சுப்பிரமணியக்குரு, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.



ஆலய புனருத்தாரண வேலைகளை துரிதகதியில் நடத்தி முடித்த கோண்டாவில் நா. சோமசுந்தர ஸ்தபதி குழுவினரை பாராட்டுமுகமாக திரு. எஸ் கே. மகேந்திரன் ஸ்தபதியாருக்கு பாலஸ்தாபன கருவறையில்வைத்து தட்சணை வழங்குவதை படத்தில் காண்க.


பாணவிடை சிவன் கோவில் குடமுழுக்குவிழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்

சிங்கப்பூர் கொம்பனி

The Malayan Trading Company

128, 130, கே கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 547

சகலவிதமான இரும்பு, பித்தளை சாமான்கள், பலவர்ண பெயின்ற் வகைகள் சகாய விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.


## புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத் தலைவர் எஸ். கே. மகேந்திரனின் இதயபூர்வமான வாழ்த்து

புங்குடுதீவின் புராதன ஆலயங்களுள் ஒன்றான பாணவிடை சிவன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறும் காட்சியும் அடியவர்கள் பலர் இணைந்து நின்று வாழ்த்தும் மாட்சியும் கண்டு அளவிலா ஆனந்தமடையும் ஆயிரமாயிரம் இதயங்களில் ஒன்றான அடியேன் என் இதயத்தில் வழிந்தோடும் மகிழ்ச்சிப் பிரவாகத்தோடு எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன்.

தமிழ்ச் சைவர்களின் புராதன ஆலயங்கள் புனர் நிர்மாணம் செய்யப்படவேண்டும் என்பதை உணர்ந்து இவ் ஆலய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி திருக்குடமுழுக்கை பல பெரியோர்களின் ஒத்துழைப்போடு இன்று நிறைவேற்றும் இளஞ் சந்ததியினரை பாராட்டுதற்கே என்னிடம் வார்த்தைகள் இல்லையென்றால் அது மிகையல்ல. அவர்களின் சேவைதிறன் அத்தகையது.

இவ்வாலயத்தின் வளர்ச்சியில் வணிகப் பெருமக்களும் தனவந்தர்களும் அடியார்களும் காட்டிய அக்கறையை

(8ம் பக்கம் பார்க்க)

### கும்பாபிஷேக நிதிவசூல் குழு

திரு. நா. இராசதுரை-ஆசிரியர், வே சுப்பிரமணியம்-உபதபாலதிபர் கா. கந்தசாமி, ம. பாலசிங்கம், எஸ். சண்முகநாதன், கொழும்பு, கு சிவலிங்கம், - கொழும்பு, நா. நடராசா-கொழும்பு பொ. தம்பிராசா - மன்னார், மு. ஏரம்பமூர்த்தி- மன்னார், பொ தங்கராசா - வவுனியா, நா ம சி. சிவசாமி - வவுனியா, எஸ் செல்லத்துரை - மாங்குளம், ஆ. கனகலிங்கம்-கிளிநொச்சி, தா. கதிரவேலு - கிளிநொச்சி, ந தண்டாயுதபாணி - கிளிநொச்சி ந. இராசையா, அ. பரமானந்தன்.

### பங்குபெறும் குருமணிகள்

பிரதிஷ்டா பிரதமகுரு:
சிவஸ்ரீ வை மு. பரமசாமிக்குருக்கள் வடகோவை
சிவஸ்ரீ சி. சர்வேஸ்வரக் குருக்கள்
ஜெகன்நாதக் குரு
சோ சாம்பசிவக் குரு
மு. ஜெகன்நாதக் குரு
ச. தி. பாலசுப்பிரமணியக் குரு
கி. வைத்தீஸ்வரக்குரு
இ. ஸ்ரீரங்கநாதக் குரு
கு. ஸ்ரீகாந்தக்குரு
நா. குமாரசாமிக் குரு
நா. ஸ்ரீனிவாசக்குரு
[illegible]
ப. முத்துக்குமார குரு
ப. சண்முகராஜ சாமா
மு. கணேசசர்மா
கோவில் அர்ச்சகர்
செ. நடராச சர்மா
ந. பிரபாகரசர்மா
பா. சுந்தரசர்மா
வை. சதாசிவ சர்மா
இ. முத்துக்கிருஷ்ண சர்மா
ஜெகசங்கரசர்மா
பாலகிருஷ்ணசர்மா
வெ. சுப்பிரமணியசர்மா
[illegible] சர்மா

### மகாகும்பாபிஷேகம் வாழி வாழி!

-எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்-

அப்பனுமா யம்மையுமா யனைத்துமாய்
அன்புமா யறமுமா யகிலமெலாம்
தப்பாத தஞ்சமொன்றாய் நின்றநிற்கும்
தண்சடையினிற் பிறைமதியைச் சடையில்வைத்த
முப்புரத்தை யெரித்தவனே! ஐயனாக
முன்பிருந்து பின்னவனும் முதிர்ச்சிபெற்று
இப்புவியிற் பாணவிடைப் பதியின்மேவும்
இராமலிங் கேஸ்வரப்பெருமானே!
[illegible]
...ஆதியிலே மருதப்பு சுவாமியாலே
ஆதரித் தடிக்கல்லு நாட்டுவித்து
மேதினியே போற்றவருள் சுரக்குந்தேவே!
மேன்மையுற வுன்வரத்தைத் தாதாவின்று
சோதியுரு வானவனே சொப்பனத்தில்
தோன்றிமெமை யாளாய் தொல்பதியில்
பாதியுரு பர்வதபத் தினிக்காய்த்தந்த
பரம்பொருளே குடமுழுக் காடின்று.
[illegible]
புங்கைநகர்ப் பகுதியுறை மக்கள்வாழி!
புண்ணியவிப் பதியினையே புனரமைக்கும்
பங்கையேற்ற பக்தர்குழாம் வாழிவாழி!
பக்குவமாய்ப் பங்குகொளும் குருமார்வாழி!
தங்கட்ணி யென்றுதானம் தந்தோர்வாழி!
தயங்கா துபயங்கள் உவந்தோர்வாழி!
மங்கையொடு தங்கியுறை மகேஸ்வரனின்
மகாகும்பா பிஷேகம் வாழிவாழி!!



ஆலயப் புனர்நிர்மாண வேலைகளை 19-9-1979ல் திரு. எஸ். கே. மகேந்திரன் ஆரம்பித்துவைப்பதையும், ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினரும் பொதுமக்களும் சூழநிற்பதையும் படத்தில் காணலாம்.

"சிவாயநமவென்று சிந்தித் திருப்பார்க்கு அபாயமொருநாளுமில்லை"


பாணவிடை சிவனின் கும்பாபிஷேகம் தீவக மக்களுக்கு திருவருள் பாலிக்க பிரார்த்திக்கிறோம்.

பெருவிழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

ஏசியா என்ரபிறைஸ்
129, 5-ம் குறுக்குதெரு கொழும்பு-11.

எஸ். குலசேகரப் பிள்ளை அன் பிறதர்ஸ்
163, 5-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 33856.

நியூ கல்யாணி ஸ்ரோர்ஸ்
189, 5-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 20331

குமாரவேலு அன் கம்பனி
217, 5-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 21057

புங்குடுதீவு பாணவிடை சிவன் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா இறையருளால் சிறப்புற வாழ்த்துகிறோம்.

பாதுகாதேவி ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: மூ. தா. சோமசுந்தரம்
(ஓடுகள் விற்பனையாளர்)

199, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7845

கிளை ஸ்தாபனம்: கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தொலைபேசி: 893.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸாம் பிரச்னை

# இந்திராவுக்கு காலக்கெடு;

## நிலைமை வழமைக்குத் திரும்புகிறது

புதுடில்லி, ஏப். 20

அஸாம் வெளிநாட்டவர் பிரச்னையை மே மாதம்15ம் திகதிக்கு முன்னர் தீர்த்து வைக்க வேண்டுமென்று அஸாம் மக்கள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு காலக்கெடு விதித்துள்ளனர்.

இதேவேளையில், அஸாம் மாணவர்களைத் தலைவர் வழிகளில் செல்ல வேண்டாமென்றும் விரைவில் வெளிநாட்டவர் பிரச்னைக்குத் தீர்வுகாணப்படுமென்றும் திருமதி காந்தி நாடு திரும்பியதும் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நிலைமை வழமைக்கு திரும்புகிறது

இதேசமயம், அஸாமில் மறியல் போராட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதன் பின் நிலைமை வழமைக்குத் திரும்புகிறதென்றும் மூடப்பட்டிருந்த கடைகள், சந்தைகள் யாவும் திறக்கப்பட்டுள்ளன என்றும் நிறுத்தப்பட்டிருந்த பஸ், ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்வரை

## பணயக்கைதிகள் விடுவிக்கப்படார்என கொமெய்னி கூறவில்லை என்கிறார்சதார்

### அதிபர் கார்ட்டரின் கூற்றுக்கு மறுப்பு

தஹ்ரான், ஏப். 20

ஈரானிய மாணவர்களினால் பணயம் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க தூதரக அதிகாரிகள் இவ்வருடம் நவம்பர் மாதம் 4ம் திகதி நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பணயக்கைதிகள் விடுதலைசெய்யப்படமாட்டார்கள் என்று ஈரானியபுரட்சித்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி என்றுமே கூறவில்லை.

இவ்வாறு ஈரானிய ஜனாதிபதி ஜனுப் பாணி சதார் தெரிவித்துள்ளார்.

சமயத் தலைவர் அயத்

(7-ம் பக்கம் பார்க்க)

ஸிம்பாப்வேயில்

# 23 பேர் அமைச்சரவை பதவி ஏற்றது

## இருவர் வெள்ளையர்

சாலிஸ்பரி, ஏப். 20

ஸிம்பாப்வேயில் பிரதமர் திரு. ரொபேர்ட் மூகாபே தலைமையில் 23 உறுப்பினர்கள் கொண்ட புதிய மந்திரிசபை நேற்று பதவியேற்றது.

இந்த அமைச்சரவையில் திரு. ஜோசுவா என்கோமா ஸிம்பாப்வே ஆபிரிக்க மக்கள் யூனியனுக்கு நான்கு அமைச்சுக்களும், வெள்ளை இனத்தவர்களுக்கு இரு அமைச்சுக்களும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. என்கோமா உள்நாட்டலுவல்கள் அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

திரு. டேவிட் சிமித், திரு. டெனிஸ் நோர்மன் ஆகிய இருவருமே வெள்ளை இன அமைச்

(7ம் பக்கம் பார்க்க)

# சீன-இந்திய நல்லுறவுக்கு சீனத் தலைவர்கள் விருப்பம்

## குவாகுவாவைச் சந்தித்த இந்திரா தகவல்

புதுடில்லி, ஏப். 20

இந்தியாவுடன் நல்லுறவை வைத்துக்கொள்ள சீனத்தலைவர்கள் விருப்பம் கொண்டுள்ளனரென்று சீன வெளியுறவு அமைச்சர் திரு. குவாகுவா தம்மிடம் தெரிவித்துள்ளதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினர்.

ஸிம்பாப்வே சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பிய திருமதி காந்தி பத்திரிகை நிருபர்களிடம் மேற்கண்டவாறு கூறினர்.

சாலிஸ்பரியில் திருமதிகாந்தி திரு. குவாகுவாவுடன் பேச்சு நடத்தியதாகவும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கமுடியாத பிரச்னைகள் எதுவும் இடையாதென்று அவர் தம்மிடம் தெரிவித்துள்ளாகவும் திருமதி காந்தி கூறினர்.

சீன-இந்திய நல்லுறவுக்கு தாம் எடுத்துவரும்முயற்சியின் ஓர் அங்கமே இது என்றும் திருமதி காந்தி கூறினர். [இ]

# தமிழக சட்டமேல்சபைத் தேர்தலில் அதிமுக வெற்றி

சென்னை, ஏப். 20

தமிழக சட்ட மேல் சபைக்கு நான்கு தொகுதிகளில் இடம் பெற்ற தேர்தலில் மூன்று தொகுதிகளை அ. தி மு. க. கைப்பற்றியுள்ளது.

அ. தி. மு. க. சார்பில் போட்டியிட்ட செல்வி ஏ. லீலாவதி, டாக்டர் ரீ. ஆர். ஜனார்த்தனன், பி. ஆர். தோமஸ் ஆகியோரே வெற்றி பெற்ற உறுப்பினர்களாவர்,

சுயேச்சையாகப் போட்டியிட்ட மேல்சபையின் முன்னாள் துணைத்தலைவர் திரு. ஜி. சுவாமிநாதனும் வெற்றி பெற்றார். [இ]

## ரயில் விபத்து: 16 பேர் பலி!

சென்னை, ஏப். 20

திருவண்ணாமலைக்கு அருகே நிகழ்ந்த ரயில் விபத்தில் 16பேர் பலியாகினரென்றும், 20 பேர் காயமடைந்தனரென்றும் அறிவிக்கப்பட்டது.

குறிஞ்சி ஆற்றின் மேலுள்ள பாலமொன்றில் ரயில்சென்றுகொண்டிருந்தபோது 2 பெட்டிகள் தடம் புரண்டு ஆற்றில் விழுந்தன வென்றும் ஒரு பெட்டி பாலத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறதென்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

## ஐ. நா. சமாதானப் படை வீரர்கள் இருவர் சுட்டுக்கொலை!

ஜெருஸலம், ஏப். 20

தென் லெபனானில் ஐ. நா. சமாதானப்படை வீரர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு இஸ்ரேல் காரணமல்லவென்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார். (இ)

## க்ஷயரோகத்திற்கு 60 லட்சம் பேர் வருடாந்தம் பலி!

புதுடில்லி, ஏப். 20

இந்தியாவில் க்ஷயரோகத்தினால் வருடாந்தம் 60 லட்சம் பேர் மரணமடைகிறார்கள் என்று புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. (இ)


# புரேற்றினெக்ஸ்

## புரதச்சத்து நிறைந்தது

இளம் பிள்ளைகளின் தசை நார், எலும்பு, மூளை ஆகியவற்றை விருத்தி செய்வதற்குத்தேவையான புரதச் சத்தும், நோய்கள் வராமற் தடுக்கும் சக்தியும் கொண்ட புரேற்றினெக்ஸ், விற்றமின்களும் கனிப்பொருட்களும் நிறைந்தது.

இன்றே ஒரு போத்தல்

**புரேற்றினெக்ஸ்**

வாங்குங்கள்

சில்லறை விலை

50 கிறும் - ரூ. 10.20

125 கிறும் - ரூ. 20.00





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் வரும் கட்டிடக் கலை நிபுணர்கள்

(யாழ்ப்பாணம்)
பல லட்ச ரூபா செலவில் தெல்லிப்பழையில் நிறுவப்பட விருக்கும், புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கும், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நிறுவப் படவிருக்கும் இரண்டு மாடிச் சத்திர சிகிச்சை நிலையமான வரைபடங்களைத் தயாரிக்க அடுத்த வாரம் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த கட்டிடக்கலை நிபுணர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய வுள்ளனர். இதற்கான உத்தரவை சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. (கொஅ)


ராஜா - (யாழ்நகர்) (சில தினங்கள் மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

ரீகோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
டெலிபோன்: 7666
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, டீன்குமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராஜகுமாரி-ஜெயச்சந்திரன்
தர்மலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்-V. R ஸ்ரீ நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மாலினி பொன்சேகா
மூவன் பலஸ
MUWAN PALASS
(புதிய வெளியீடு—சிங்களம்)

SANTHI JAFFNA Phone 7042
Daily 10-30, 2-30, 4-45; 7-00 & 9-30 p.m.
RECAPTURE "THE STING EXPERIENCE"
Remember how good you felt the first time
WINNER OF 7 ACADEMY AWARDS
including Best Picture in 1978 ........
PAUL NEWMAN ROBERT REDFORD ROBERT SHAW IN
"THE STING"
—COLOR—ACTION PACKED MOVIE—

REGAL 21-4-80
Daily at 2 00, 4-30. 7-00 & 9-30 p. m. only
GEORGE S'GAL — GOLDIE HAWN
in
"THE DUCHESS AND THE DIRT WATER FOX"
(Color)


## அரசடி ச. ச. நிலையம் முதலிடம்

(பண்டத்தரிப்பு)
விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட வலிகாமம் தென்மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையம் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துள்ளது.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் மாதகல் விபுலானந்தர் படிப்பக விளையாட்டுக்கழகம் இரண்டாவது இடத்தையும், சித்திரைமேழி விளையாட்டுக்கழகம் மூன்றாவது இடத்தையும் பெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சி. கோபாலரத்தினம் வழங்கினார்.

வலி தென் மேற்கு பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. சி. கந்தசாமி நன்றியுரை கூறினார். (அ)

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 9-ம் திகதி (21-4-80) திங்கட்கிழமை

மேடம்: இரக்க சிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள். கண்ணியமான தினம்.

இடபம்: எதிலும் மந்த நிலை தென்படும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். விவசாயிகள் வாழ்க்கையில் நஷ்டத்துக்கு இடமுண்டு. சிந்தனைகளின் சுழற்சியில் சிக்கித் தவிப்பீர்கள். துக்க தினம்.

மிதுனம்: குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும். மனத்தில் அமைதி குன்றும். விஷமிகளின் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும்.

கடகம்: வாழ்க்கை பூங்காவில் வசந்தம் நிலவும்- சுபகருமங்கள் நடைபெறும். சுற்றமும் சூழும்.

சிங்கம்: நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும். வியாபாரிகளின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம். பொருட் செலவும் உண்டு.

கன்னி: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும் மோகன வாழ்வு கிட்டும் முன்னேற்ற வழியும் தோன்றும்.

துலாம்: அரசியலில் ஆர்வம் பிறக்கும், பொதுமக்களின ஆதரவு கிடைக்கும் இதன் மூலம் சிரமங்களும் தென்படலாம். சிலருக்கு எதிர்பாராத வகையில் அதிர்ஷ்டமும் கிடைக்கும்.

விருட்சிகம்: தூரதேசத்து வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்

தனு வாழ்க்கையில் தென்றல் வீசும். ஊதியவர்கள் உங்களுக்கு உதவுவதற்கு முன் வருவார்கள். குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரலாம். தெய்வத்தின் துணையுமுண்டு.

மகரம்: வேண்டிய மூவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். இவரைப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும் சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டக்கூடும். சகோதர வழியாலும் சஞ்சலம் உண்டு.

கும்பம்: மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். பெரிய மனிதர்களின் உறவு தாராளமாகக் கிடைக்கும். குறிக்கோள்களில் வெற்றியுண்டு.

மீனம்: இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலிலும் சிறப்புண்டு. மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்கள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


ஹரன் மானிப்பாய்
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
(இரு வேடம்)
பட்டிக்காட்டு ராஜா
(புதிய பிரதி)(கலர்)

நாகம்ஸ் (மல்லாகம்)
தினசரி 6-15, 9-45
சனி, ஞாயிறு 3-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 3-30
எம். ஜி. ஆர். -லதா
ஊருக்கு உழைப்பவன்


## மாவட்ட அபிவிருத்தி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
சுவாமிநாதர் பேசுகையில் கூறியதாவது:

நாம் ஏமாற்றப்பட்டுவிட்டோமென இன்று தமிழ்மக்கள் எண்ணத் தொடங்கி விட்டனர்.

செல்வாக்குப்பெற்ற தமிழ்க் காங்கிரஸ் ஏன் தேர்தலில் தோற்றது? ஒருமுறை எம்மை ஒற்றுமையாக அனுப்பிவையுங்கள் என்று கூட்டணியினர் கேட்டனர். அவர்களுக்கு ஆதரவாக ஆசிரியர்களும், விவசாயிகளும், பொதுமக்களும் ஒன்றுசேர்ந்து வாக்குப்போட்டனர் தமிழ்ஈழம் கிடைக்குமென எதிர்பார்த்த பொதுமக்கள் அதுகிடையாததைக் கண்டு, அவர்களால் தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து விட்டனர் அதனால் பொதுமக்கள் எம்மைநாடி வரத் தொடங்கிவிட்டனர்.

மாநகர சபை உறுப்பினர் திரு. யேசுதாசன் பேசுகையில் அமரர் பொன்னம்பலத்தையும் அவரது சேவையையும் அவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியையும் தமிழ்மக்கள் மறக்கவில்லை என்பதை இன்று அறியக்கூடியதாக இருக்கிறது என்றார்.

மாநகர முதல்வர் மிகவும் நல்லவர் அவர் கட்சியின் மேலிடத்திற்குக் கட்டுப்பட்டுள்ளார். அதனால் அவரால் எதுவும் செய்யமுடியாது. கூட்டணியினருக்குத்தான் எதையும் அவரால்செய்யமுடியும் என்றும் திரு. ஜேசுதாசன் கூறினார்.

எமது தலைவர் மறைந்து விட்டார். அவர் விட்டுச் சென்ற கொள்கை எம்மை விட்டுமறையவில்லை. ஒற்றுமை தான் எமது ஆயுதம். நேர்மையாகவும், அன்பாகவும் பண்பாகவும் நடப்போமேயானால் எமது கட்சிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு எஸ். என். பாலசுப்பிரமணியம் பேசுகையில் யாழ். மாநகர முதல்வரும் சாவகச்சேரி நகரசபை முதல்வரும் கூட தமிழ்காங்கிரசில் இருந்து வளர்ந்தவர்கள் தான் என்றார்.

திரு. ஆர். ஈ. ஆனந்தராசா பேசுகையில் இன்று கூட்டணியினர் மூன்று பிரிவினர்களாகப் பிரிந்து நிற்கின்றனரென்றும் கூட்டணித் தலைவர்கள் தவறானமுறையில் இயங்கினால் அத்தலைவர்களை தூக்கி எறியவேண்டுமென்றும் அதை விடுத்துக்கட்சியில் இருந்து பிரிந்து நிற்பது நல்லதல்ல வென்றும் கூறினார்

திரு. எம் கே. சுப்பிரமணியம் பேசுகையில் இளைஞர்களைத் தவறான முறையில் இழுத்துச் செல்வதையும் அரசு தவறான வழியில் செல்வதைக் கண்டிப்பதையும் நோக்கமாக பத்திரிகை இயங்க வேண்டும் என்றார்.

டாக்டர் ஏ. எஸ். ஏப்பிரகாசம் கூறியதாவது:

இன்று பாராளுமன்றத்தில் எமது கட்சியினரின் பிரச்னைகளை எடுத்துக்கூற எமது பிரதிநிதி எவரும் இல்லை. யாழ் மாநகரசபையில் எமது கட்சியினர் 5 பேர் இருக்கிறோம், அப்படி இருந்தும் எமதுகட்சிக்காரர்கள் எவருக்கும் எந்த விதமான வேலை வாய்ப்பும் வழங்கப்படவில்லை.

எமது கட்சி இளைஞர்கள் கேட்டுவரும் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கமுடியாத நிலையில் நாம் இருக்கிறோம்

கூட்டணியினருக்கு மட்டும் தான் வேலை வாய்ப்புக்கள் என எமக்குக்கூறியுள்ளனர் அதனால் நாம் எதுவும் செய்யமுடியாத நிலையில் இருக்கிறோம்.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம் கூறியதாவது பாரதத்தின் சுதந்திரத்திற்கு மகாத்மா காந்தியால் நடாத்தப்பட்ட பத்திரிகைதான் தான் காரணம்.

எமது பாரம் பரியத்தைப் பற்றி எடுத்து கூறுவதாகப் பத்திரிகை இயங்க வேண்டும். (கொ)

## பணயக்கைதிகள்..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
அயதொல்லா கொமெய்னி பணயக் கைதிகளின் விடுதலை குறித்து மேற்கண்டவாறு கூறியதாகவும் இது குறித்து தாம் கவலையடைந்துள்ளதாகவும் அமெரிக்கஜனாதிபதிதிரு.ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளது அர்த்தமற்றவை என்றும் ஜனப் சதார் கூறினார்.

ஈரானிய பாராளுமன்றம் கூடும்வரை பணயக்கைதிகள் விடுதலைசெய்யப்படமாட்டார்கள் என்றே அயத்தொல்லா கொமெய்னி கூறினாரென்றும் ஜனப் சதார் மேலும்கூறினார். (இ)

## 23 பேர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
சரிகளாவர்.

ஸிம்பாப்வே பொதுத்தேர்தலில் 100 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு வெள்ளை இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 20 தொகுதிகளைவிட மீதமுள்ள 80 தொகுதிகளில் திரு. முகாபேயின் கட்சிக்கு 57 இடங்களும், திரு, என்கோமாவின்கட்சிக்கு 20 இடங்களும், பிஷப் முஸறேவா கட்சிக்கு 3 இடங்களும் கிடைத்ததுதெரிந்ததே. (இ)

## அதிக விண்ணப்பங்கள்

(மன்னார்)
வங்கி மூலம் மீன் பிடிக்க கடன் வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் உதவி கோரி விண்ணப்பிப்போரின் தொகை அதிகரித்துள்ளது

ஏற்கவே சுய தொழில் வசதியைப் பெறும் பொருட்டு மீன் பிடி கலம், எஞ்சின் போன்றவற்றை அரசின் திட்டப்படி கடனைப் பெற்றவர்கள் கூடிய வருவாயைப் பெறுவதைநேரில் கண்டதாலேயே இப்படி உதவி கோரி விண்ணப்பிப்போரின் தொகை அதிகரித்துள்ளது எனத்தெரிகிறது. (அ)

## உப-தபாலகம்

(நெல்லியடி)
தபால் தந்தி அமைச்சின் தொகுதிக்கு ஒரு உப-தபாலகந்தோர் நிறுவும் திட்டத்தின் கீழ், உடுப்பிட்டித் தொகுதியில் மணப்பாதி என்னுமிடத்தில் உப-தபாற்கந்தோர் நிறுவப்பட வுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.
SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## குடிநீர்த் திட்டம்
(மன்னார்)

டச்சு அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப் படவிருக்கும் மன்னார் பட்டின குடிநீர் விநியோகப் புனரமைப்புத் திட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (க)

## மீன்வாடிகள் தீக்கிரை
(மன்னார்)

சிலாவத்துறை கடற்கரைப் பகுதிகளில் 8 மீன் வாடிகள் தீப்பற்றி எரிந்து சாம்பராகியது. மீன்வாடிகள் தீப்பற்றி எரிந்ததால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளும் தீயில் சாம்பராகியது. (க)

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
டில்கா வாச்வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் ரேஸ்மாடி.
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வன்னிவள...
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடி நூல் வெளியீட்டு விழாவின்போது எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"இந்நூலைப் பார்க்கும் பொழுது எமக்குத் தெரியாத எத்தனையோ விடயங்களை அறியக் கூடியதாகவிருக்கிறது. நூலின் அட்டைப் படத்தைத் தாங்கிவருகின்ற "அரிபாத்தை"யின் வீரவரலாறு, வீரத்தாய்மார்கள் எமது தமிழ்ப்பிரதேசத்தில் சாதாரணக் குடிகளாக வாழ்ந்திருக்கிறார்கள் என்று காட்டுகிறது. அன்று யானையை அடக்கிய பணிக்கர் போல் இன்றும் யானையை அடக்கக் கூடியவர்கள் குமிழமுனைப்பகுதியில் வாழுகின்றார்களா? என்ற கேள்வியையும் எழுப்பிஅது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தமது வாழ்த்துரையில்: "தம்பி" மெற்றூஸ்மயில் தொடர்ந்தும் இச்சேவையிலே பட்டு எமது சந்ததியினருக்கு கலைப்பொக்கிஷமாகத் திகழவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் சிறந்த பண்பாடும் துடிதுடிப்பும், தெளிந்த சிந்தனையும் கொண்டவர் மெற்றூஸ்மயில், அவருடைய விடாமுயற்சியால் தொகுக்கப்பட்ட இந்நூல் இன்றைய எமது வாழ்க்கைமுறையில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது" என்றார்.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது வாழ்த்துரையில் நூல்கள் அதிக விலையில் விற்கப்படும் இக்காலத்தில் அரிய இலக்கியப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டிருந்த முல்லை இலக்கிய வட்டத்தினருக்கும் தம்பி மெற்றூஸ் மயிலையும் பாராட்டுகின்றேன்" என்றார்.

வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் வாழ்த்துரை நிகழ்த்தும்பொழுது "கல்வித்திணைக்களத்தில் கடமையாற்றும் மெற்றூஸ்மயில் இம் முயற்சியை மேற்கொண்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். தொழிற்சங்கரீதியில் தீவிரமாக பங்குகொள்ளும் இவர் இலக்கியத்திலும் திறமைவாய்ந்தவர் என்பது எனக்குத் தெரியாது. இவ்வளவு அழகாக, சிறந்த பதிப்பாக தொகுத்து தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தந்ததை நான் பாராட்டுகின்றேன்" என்றார்.

கல்வித்திணைக்கள நிர்வாக உத்தியோகத்தரும் நல்லூர் கிராமசபை விசேட ஆணையாளருமான திரு ஆ. மகாலிங்கமும் வாழ்த்துரை நிகழ்த்தினர்.

ஆய்வரங்கில் "யாழ் பல்கலைக்கழக தமிழ்ப்பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு. செ. சண்முகசுந்தரம், கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோரும்

## திறப்புவிழா
(சுன்னாகம்)

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க ஏழாலை மொத்த விற்பனை நிலையத் திறப்புவிழா இன்றிரவு திரு. சு. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இவ்விற்பனை நிலையத்தை திறந்து வைப்பார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

---

ஆய்வுரை நிகழ்த்தினர்.

கலாநிதி அ. சண்முகதாஸ் தமது ஆய்வுரையில்,

'வன்னிவள நாட்டுப்பாடல்' நூல் இந்நாட்டிலே முன்னரெழுந்த நாட்டுப்பாடல்த் தொகுதிகளைவிட சிறப்பான முறையிலே பதிப்பிக்கப்பட்டுள்ளது. பதிப்பாசிரியர் திரு. மற்றூஸ் மயில் ஒரு பதிப்பாசிரியனுக்கு இருக்கவேண்டிய நேர்மையுடன் இத்தொகுதியினை வெளிக் கொணர்ந்துள்ளார். வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார் எனத்தமிழர் வாழ் பிரதேசங்களின் மாவட்டத் தனித்துவப் பண்பாடுகளை அறிய இதுபோன்ற தொகுதிகள் உதவுகின்றஅதே வேளையின் இவற்றினூடாகத் தமிழ்மக்கள் எல்லோருக்குமே பொதுவானதொரு நாட்டுப் பண்பாட்டினைத் தரிசிக்க முடியும். அத்தகைய தரிசனத்துக்கு 'வன்னிவள நாட்டுப்பாடல்' தொகுதியிலே காணப்படுஞ் சில பாடல்கள் உதவுகின்றன என்றார்.

பதிலுரை நிகழ்த்தி உரையாற்றிய நூல் பதிப்பாசிரியர் திரு. செல்லையா மெற்றூஸ்மயில் தமதுரையில் "ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழுகின்ற தமிழர்களும் பிரதேச உணர்ச்சி கொண்டவர்களாக இருக்க வேண்டும் ஆனால் நாம்தமிழர் ஒரே இனத்தவர், ஒரே கலாச்சாரம், பண்பாடு உடையவர்கள் என்பதை மறந்துவிடலாகாது. ஆதலால் பிரதேச உணர்ச்சி, இனத்தின் முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படாதவகையில் அமைய வேண்டும். ஒரு பிரதேசத்திலே பல பிரதேசத்தில் வாழ்கின்றவர்கள் இருக்கின்றார்கள். அங்கு, 'நாம் தமிழர்' என்ற உணர்வு கொண்டு வாழவேண்டும் அதேநேரத்தில் அங்கு பிறந்த மண்ணிலேயே வாழுகின்றவர்கள், தமது பிரதேச உணர்ச்சியை கண்டி, கலை, கலாச்சாரம், அபிவிருத்தி என்பவை முறையே பாதுகாத்து உற்பத்தி செய்யவேண்டும்என்று முள்ளியவளை கலைத்தாய் மன்றத்தின் 'பண்டார வன்னியன்' நாடகமும் முள்ளியவளை அண்ணாவிமார்களுடைய 'நாட்டாரிசை' பாடல்களும், வேல் ஆனந்தனின் நாட்டியாஞ்சலியும் இடம்பெற்றன.

முல்லை இலக்கிய வட்டத்தின் தலைவர் முல்லைமணி வே. சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்த திரு. நா. சுப்பிரமணிய ஐயர் வெளியீட்டுரை நிகழ்த்தினர். [கொ]

## கும்பாபிஷேக...
(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வனையும் நீரில் தனித்தனியிடப்பட்டு அந்நீரினால் அபிஷேகஞ் செய்தும் பிம்பசுத்தி ஏற்படுகிறது. அடுத்து மிருக சங்கிரகணம் என்னும் கிரியை நிகழும். உலக மக்கள் தொழில் புரிந்து உண்பதற்கு உறுதுணையான கிரியையாகும். மண்ணில் முளையிடுதல் பாலிகை தெளித்தலும் அதனையே உணர்த்தும் அடுத்து பாலஸ்தாபன ஆலயத்திலிருந்து இறைவனை யாகசாலைக்கு அழைத்துச் செல்லுதற்குரிய கிரியை நிகழும். இதனையே பிரசன்ன அபிஷேகம் உணர்த்தும். குருவின் வேண்டுதலை ஏற்று இறைவன் சகலகலா மூர்த்திகளுடன் யாகசாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகும் பொழுது கடஸ்தாபனம் நிகழும். விம்பத்திலிருந்த இறைவன் கலசத்தில் வந்தமர்தலே கடஸ்தாபனமாகும். உருவத் திருமேனியில் இருந்த பரம்பொருள் அருவத் திருமேனியாகி கலசத்திலமர்கிறார். கலசங்கள் யாகசாலையில் தாபிக்கப்பட்டபின் விசேட வழிபாடு நிகழும்.

ஐந்தாவது முக்கிய கிரியை யாகசாலையில் சிவாச்சாரியர் குண்டத்தில் அக்கினியை உற்பத்தி செய்தலாகும். காலையும் மாலையும் பூசையும் ஓமமும் நன்கு நடைபெறும். பூசை, ஓமம், செபம், பாராயணம் நான்கும் காலையும் மாலையும் இடைவிடாது நிகழ்வதால் திருவருள் நிறைவு நன்கு உண்டாகிறது. அக்கி ஓமம் கூடக்கூட அருள் நிறைவும் அதிகரிக்கும். யாகசாலையில் வழிபடும் அருவத்திருமேனியாகிய கும்பத்திற்கும் பிரதிட்டை செய்யப்பட்ட உருவத்திருமேனிக்கும் தற்பைக்கயிற்றின் மூலம் தொடர்பு ஏற்படுத்தி உருவேற்றப்படுகிறது யாகசாலை வேதிகையில் வைக்கப்பட்ட கலச நீரானது ஓமம் செபம் பூசை, பாராயணம் என்பவற்றால் அருளமுதம் ஆகமாறுகிறது.

ஆறாவதாக நடைபெறும்முக்கியமான கிரியையே மகாகும்பசபிஷேகமாகும். பூரணாகுதி முடிந்து யாத்திரா தானமும் முடிந்து கும்பம் தாம்புடை சூழ தோத்திர பராயணத்துடன் வீதிவலம் வந்து உரிய சுபவேளையில் அடியார்களின் அரோகராகோசம் ஒலிக்க கலசத்திலுள்ள அருளமுதத்தை உருவத் திருமேனிமீது சிவாசாரியார் அபிஷேகம் செய்தருளுவார். ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறும். இறைவன் திருமேனியிலுள்ள அருளமுதம் அபிஷேகிக்கப்பட்டதும் திருவருள் பொங்கிவழியத் தொடங்குகிறது. இதனை நாம் பாரிவர்ரி உண்டு இறைவன் திருவருளைப் பெற்று உய்ர்வாமாக இதுவே மகாகும்பாபிஷேகத்தின் மாண்புவாகும். இதனைத் தொடர்ந்து நாற்பத்தைந்து நாள் மண்டலாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து திருவிழாவும் நிகழும் இறைவன் திருவருள் என்றும் பொழிக

## தலைவர் தெரிவு
(மன்னார்)

தேசிய கூட்டுறவுச் சபை மன்னார் கிளை வருடாந்தக் கூட்டத்தில் உயிலங்குளத்தைச் சேர்ந்த திரு. இரத்தினசபாபதி மன்னார்கிளையின் தலைவரானர்

## 28-ம் திகதி...
(2-ம் பக்கத்தொடர்ச்சி)

இதுதொடர்பாக விசாரணை செய்த காங்கேசன்துறைப் பொலிசார் திருடர்கள் விட்டுச் சென்ற சேட் ஒன்றைக் கைப்பற்றி பொலிஸ் நாயான "றெக்ஸ்" மூலம் இத்திருட்டைத் துப்புத்துலக்குவதில் ஈடுபட்டனர்.

அச்சமயம் திருட்டுப்போன வீட்டிலிருந்து 200 யார் தூரத்திலுள்ள எஸ். சிவலிங்கம் என்பவரை பேற்படி பொலிஸ் நாய் காட்டிக் கொடுத்தது. அவரையும் அவ்விடத்தைச் சேர்ந்த ஆர். ஸ்ரீஸ்கந்தராசா என்பவரையும் கைதுசெய்து மல்லாகம் பதில் நீதிபதி திரு. ரி தம்பிரத்தினம் முன்னிலையில் காங்கேசன்துறைப்பொலிசார் ஆஜர் செல்தசமயம் இவர்கள் இம்மாதம் 28ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப் பட்டனர். (க)

## புங்குடுதீவு...
(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஆர்வத்தையும் நேரில் கண்ட போது இப்டணியை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டவர்கள் அடைந்த துன்பங்களும் துயர்களும் இடர்களும் விலத்தியோடிய விதங்களை நோக்கியபோதும் திருவருளின் பெருமையையும் மகிமையையும் நினைத்து நான் மகிழ்ந்த, ஆச்சரியப்பட்ட, அதிர்ச்சியடைந்த சந்தர்ப்பங்கள் பல.

இவ்வாலயம் மேன்மேலும் கீர்த்தி பெறவும் அண்டியிருப்போர் சிறப்புக்கள் பல பெறவும் எல்லாம் வல்ல பரமனை வேண்டி தமிழ் ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து வந்து பண்டிட்களாக ஆலயத்தில் தங்கியிருந்து தவமியற்றி இன்று நிறைந்த மனதோடு திருக்குடமுழுக்கை நடத்திமுடிக்கும் குருமணிகளுக்கும் ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினருக்கும் உற்றதுணைகள் பலசெய்து உறுதுணையாக நிற்கும் என் இனிய தோழமை உள்ளங்களுக்கும் என்மனமார்ந்த பாராட்டுதல்களையும் அன்பான வாழ்த்தினையும் உரித்தாக்கி அமைகின்றேன்.

எஸ். கே. மகேந்திரன்,
'சத்திய இல்லம்' புங்குடுதீவு.

## மரண அறிவித்தல்
### பண்டாரி முருகன்

பொயிட்டி நீர்வேலியைச் சேர்ந்த பண்டாரி முருகன் காலமானார். இவர் லட்சுமியின் அன்புக் கணவரும், இராசரத்தினம், செல்வரத்தினம், சந்திரன், பூமணி, கண்மணி, இராசமணி, தங்கமணி ஆகியோரின் அன்புத் தந்தையும் இளையதம்பி, நாகமுத்து, தெய்வானை, சிதம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று புன்னாலைக்கட்டுவன் வத்தேக்கலட்டி மயானத்தில் 2 மணிக்கு நடைபெறும்.

551

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 66-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No QE/8948/78 The Eelanadu, Post Box No 49, Telegram 'Eelanadu' போன் 689.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org